027

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

# SECOND YEAR EXAMINATIONS IN BACHILOR OF BUSINESS ADMINISTRATION (EXTERNAL) – 2011/2012

HELD IN JUNE / JULY 2013

## BBA 24 – MANAGEMENT INFORMATION SYSTEM

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. நேரம்: **03 மணித்தியாலங்க**

---

Q1.

a) "ஒரு தகவல் முறைமையானது நிறுவனம் மற்றும் அதன் சுற்றுப்புறச் சூழல் பற்றிய தகவல்களைக் கொண்டிருக்கும". தகவல் முறைமை மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய சூழல் சக்திகள் பற்றி விபரிக்குக.

(08 புள்ளிக

b) "தகவல் முறைமை கற்கையானது தொழில்நுட்ப மற்றும் நடத்தை ரீதியான துறைகளிலிருந்து பங்களிப்புச் செய்யப்படும் விடயங்களோடும், நுண்ணறிவுகளோடும் தொடர்புபடுவதாக காணப்படுகிறது". விபரிக்குக.

(06 புள்ளிக

c) தகவல் முறைமையின் தந்திரோபாய வணிக குறிக்கோள்கள் எவை?

(06 புள்ளிக

(மொத்தம் 20 புள்ளிக

Q2.

a) இன்றைய மின்னியல் வியாபாரத்தை செயற்படுத்துவதற்கும், முகாமைப்படுத்துவதற்கும் ஏன் தகவல் முறைமை மிக அத்தியவசியமானதொன்றாகக் காணப்படுகிறது?

(06 புள்ளிக

b) நிறுவன ரீதியான பிரயோகங்கள் (Enterprise applications), ஒத்துழைப்பு மற்றும் தொடர்பாடல் முறைமைகள் (Collaboration and Communication System), உள்ளக வலையமைப்புகள் (Intranets) போன்றன எவ்வாறு நிறுவன ரீதியான செயற்திறனை அதிகரிக்கின்றது ?

(08 புள்ளிக

c) "நிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் பல வகையான தகவல் முறைமைகள் நிறுவனத்தின் பல்வேறு அம்சங்களினால் (Features of organization) பாதிப்புக்குள்ளாகின்றன". அவ்வாறான அம்சங்களை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Q3. a) தந்திரோபாய மட்ட தகவல் முறைமை (Strategic–Level Information System) என்ற பதத்தினை வரையறுக்க.

(04 ள்ளிகள்)

b) "வியாபார பெறுமதிச் சங்கிலி (Business Value Chain) யினை பயன்படுத்துதல் போட்டி யாளர்களுக்கு அல்லது தொடர்புடைய ஏனைய தொழில் நிறுவனங்களுக்கு எதிராக ஒப்பிட்டு குறியிடலுக்கான (Benchmarking) வியாபாரச் செயல்முறைமை கருத்தில் கொள்ளத்தூண்டும்".

i) ஒப்பிட்டு குறியிடல் (Benchmarking) என்றால் என்ன? (04 புள்ளிகள்)

ii) தொழில் ரீதியில் சிறந்த நடைமுறைகளை எவ்வாறு அடையாளம் கண்டு கொள்ளலாம்? (04 புள்ளிகள்)

c) தகவல் முறைமைகளைப் பயன்படுத்தி போட்டி ரீதியான தந்திரோபாயங்களை விருத்திசெய்ய நிறுவனங்களுக்கு எவ்வாறு Porter இன் போட்டி ரீதியான சக்தி மாதிரி (Competitive Forces Model) உதவுகிறது?

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Q4.

a) "தனிநபர்கள் தங்கள் நடத்தைகளை வழிகாட்ட எது சரி எது தவறு என்று சுதந்திரமாக தெரிவு செய்யக்கூடிய கொள்கைகளையே நீதி நெறிமுறை (Ethics) குறிக்கின்றது". நெறிமுறையான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வழிகாட்டக்கூடிய குறிப்பிடத்தக்க கொள்கைகள் (Ethical Principles) யாவை?

(08 புள்ளிகள்)

b) தற்கால தகவல் முறைமைகளின் தொழில்நுட்பம் மற்றும் இன்ரநெற் என்பன தனிநபர் தனியுரிமையை (Privacy), மற்றும் அறிவுசார் சொத்துக்களைப் (Intellectual property) பாதுகாப்பதில் ஏன் சவால்களை எதிர்நோக்குகின்றன?

(06 புள்ளிகள்)

c) நிறுவனம் ஒன்றினால் எடுக்கப்படும் தீர்மானங்களின் வகைகளை விபரிப்பதுடன், தீர்மானம் மேற்கொள்ளல் செய்முறை எவ்வாறு நிகழ்கிறது எனவும் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Q5. பின்வருவனவற்றில் ஏதாவது **நான்கிற்கு** சிறுகுறிப்பு எழுதுக.

a) தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பும் அதன் கூறுகளும் (IT Infrastructure and its components)
b) முறைமை விருத்திச் செய்முறையின் பிரதான செயற்பாடுகள' எவை?
c) வலைப்பின்னலின் வகைகள்
d) MIS யிலிந்து எவ்வாறு DSS வேறுபடுகிறது?
e) விநியோக சங்கிலி முகாமைத்துவ முறைமை (Supply Chain Management System)

(4x5 = 20 புள்ளிகள்)

-End of the paper -